தமிழ்மொழி
ஆண்டு 5

கற்றல் தரம் : 3.6.15

தொகுதி 2, பாடம் 3 (பக்கம் 12, 13)

பதவி உயர்வு பெற்ற ஆசிரியரைப் பாராட்டி எழுதப்பட்ட உரையில் காலியான இடத்தில் சரியான சொற்களைக் கொண்டு நிறைவு செய்க.

மதிப்பிற்குரிய தலைமையாசிரியர் அவர்களே ஆசிரியர்களே என் சக நண்பர்களே உங்கள் அனைவருக்கும் என் ________________ வணக்கத்தைக் கூறிக் கொள்கிறேன்.

அன்பிற்குரியவர்களே,

பள்ளி ஆசிரியர் மாணவ நலப் பொறுப்பாசிரியராகப் பதவி உயர்வு பெற்ற, ஆசிரியர் திரு. கவின் அவர்களைப் பாராட்டிப் பேச வாய்ப்பளித்தமைக்கு ஏற்பாட்டுக் குழுவிற்கு நன்றி கூறிக் கொள்கிறேன். ________________ பெற்ற ஆசிரியர் திரு. கவின் அவர்களுக்கு என் வாழ்த்துகள்.

வருகையாளர்களே,

ஆசிரியர் கவின் அவர்கள் சுமார் பத்து ஆண்டுகள் இந்தப் பள்ளியில் பணி புரிந்துள்ளார். அவர் இப்பள்ளிக்குப் பல ______________ செய்துள்ளார். தகவல் தொழில்நுட்பத்தில் கைத்தேர்ந்த அவர், நம் பள்ளி மாணவர்கள் அத்துறையில் ________________ பெற முக்கியப் பங்கு வகித்துள்ளார். மேலும், ஆசிரியர் மாணவர்களுக்குக் பாடம் போதிக்கும் முறையே வித்தியாசமாக இருக்கும். மாணவர்கள் அவரின் ____________________ ஏங்கி கொண்டிருப்பர்.



| சிறப்பு ஆற்றல் | தொண்டுகள் | சிரந்தாழ்ந்த |
|---|---|---|
| போதனைக்காக | பதவி உயர்வு | |

LIVEWORKSHEETS

சபையோர்களே,

கணினித் துறையில் ஆசிரியர், மாணவர்கள் சுயமாகப் படைப்புகளைப் படைக்கும் ஆற்றல் கொண்டவர்களாக உருவாக்கியுள்ளார். மாணவர்கள் பள்ளியைப் பிரதிநிதித்து பல கணினிப் போட்டிகளில் பங்கேற்றுச் ________________ படைத்துள்ளனர். இதனால், அவருக்குப் __________________________ கிடைத்தது.

வருகையாளர்களே,

ஆசிரியர் கவின், ____________________ மிக்கவர். அவர் ____________________ மாணவர்களுக்குப் ________________________ கட்டுவார்; ________________________ நடத்துவார். மேலும், அவர் சுறுசுறுப்பாக மாணவர்களுக்குக் கல்வி கேள்விகளில் வழிகாட்டும் முறையில் வல்லவர்.

அன்பிற்குரியவர்களே,

ஆசான் திரு. கவின் அவர்கள் பதவி உயர்வு பெற்று, இப்பள்ளியை விட்டு சென்றாலும், இப்பள்ளிக்குத் தேவையான உதவிகளைச் செய்வார் என எதிர்ப்பார்க்கிறேன். அவருக்கு மீண்டும் என் பாராட்டுகளும் வாழ்த்துகளும் தெரிவித்து, இத்துடன் விடைபெறுகிறேன். நன்றி.

| | | | |
|---|---|---|---|
| பள்ளிக்கட்டணம் | பேரும் புகழும் | சாதனை | கூடுதல் வகுப்பு |
| ஏழ்மையான | | | பரிவுகுணம் |



UD COLLECTION

LIVEWORKSHEETS